இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வெள்ளிக்கிழமை 01.05.2026

# இணையற்ற இரட்டை இலக்க சாதனை!

தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் என்ற சிகரத்துக்கு மகுடம் வைக்கும் செய்தி இது....

**தொடர்ச்சியாக இரண்டாவது நிதி ஆண்டிலும் தமிழ்நாடு இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை அடைந்துள்ளது. இதனை நாம் சொல்லவில்லை. ஒன்றிய புள்ளியியல் துறைதான் சொல்கிறது. 2024-25 ஆம் நிதி ஆண்டில் 11.19 விழுக்காடு வளர்ச்சியை தமிழ்நாடு கண்டது. இரட்டை இலக்க பொருளாதார வளர்ச்சியை தமிழ்நாடு அடைந்தது. சாதாரணமான சாதனை அல்ல இது.**

இதே சாதனை தொடர்வதும் சாதாரணமானது அல்ல. 2025-26 ஆம் நிதி ஆண்டில் 10.83 விழுக்காட்டை தக்க வைத்து இரட்டை இலக்க சாதனையை இரண்டாவது முறையும் மெய்ப்பித்துக் காட்டி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**“தமிழ்நாடு என்றாலே சாதனை! சாதனை! சாதனை! முதல் மூன்று ஆண்டுகளில் அடித்தளம் அமைத்து, இப்போது தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாக இரட்டை இலக்க வளர்ச்சி என்ற சாதனையை நிகழ்த்தி இருக்கிறோம். நம்முடைய போட்டி என்பது மற்ற இந்திய மாநிலங்களுடன் அல்ல. தெற்காசியாவில் முதன்மை மாநிலமாக தமிழ்நாடு உயர வேண்டும்” என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கும் ஒவ்வொரு சொல்லும் 100 விழுக்காடு உண்மையானது.**

இந்த உயரத்தை படிப்படியாக குறிவைத்து தமிழ்நாடு வளர்ந்துள்ளது.

- இந்திய அளவில் பொருளாதார வளர்ச்சி என்பது 2021 -22 ஆகிய ஆண்டில் 9.7 விழுக்காடாக இருந்தது. அப்போது தமிழ்நாடு 7.89 விழுக்காடாக இருந்தது.
- இந்திய அளவில் பொருளாதார வளர்ச்சி என்பது 2022 -23 ஆகிய ஆண்டில் 7.6 விழுக்காடாக இருந்தது. அப்போது தமிழ்நாடு 6.17 விழுக்காடாக இருந்தது.
- இந்திய அளவில் பொருளாதார வளர்ச்சி என்பது 2023 -24 ஆகிய ஆண்டில் 9.2 விழுக்காடாக இருந்தது. அப்போது தமிழ்நாடு 9.26 விழுக்காடாக உயர்ந்தது.
- இந்திய அளவில் பொருளாதார வளர்ச்சி என்பது 2024 -25 ஆகிய ஆண்டில் 6.5 விழுக்காடாக இருந்தது. அப்போது தமிழ்நாடு 11.19 விழுக்காடாக உயர்ந்தது.
- இப்போது இந்திய அளவில் பொருளாதார வளர்ச்சி என்பது 7.4 விழுக்காடாக இருக்கும் போது தமிழ்நாட்டின் வளர்ச்சியை 10.83 ஆக உயர்த்தி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். தேசிய விழுக்காட்டை விட தமிழ்நாட்டின் விழுக்காட்டை அதிகரித்துள்ளார் முதலமைச்சர் அவர்கள். அதாவது இரட்டை இலக்க வளர்ச்சியை இரண்டாவது ஆண்டாக தக்க வைத்தார் முதலமைச்சர் அவர்கள்.

வளர்வதைப் போலவே வளர்ச்சியைத் தக்க வைப்பதும் மிகமிக முக்கியமானது ஆகும். “ இந்தச் செயல்பாடு, மாநிலத்தின் வலுவான கொள்கைக் கட்டமைப்பு மற்றும் கட்டமைப்பு வலிமைகளை எடுத்துக்காட்டி, இந்தியாவின் வளர்ச்சிக்கு ஒரு முன்னணிப் பங்களிப்பாளராக அதை நிலைநிறுத்துகிறது.” என்று பொருளாதார அறிஞர் கே.ஆர். சண்முகம் ( மெட்ராஸ் ஸ்கூல் ஆஃப் எகனாமிக்ஸ் முன்னாள் இயக்குநர் மற்றும் தமிழ்நாட்டின் பொருளாதார ஆலோசகர்) குறிப்பிட்டு உள்ளார்.

தமிழ்நாடு தொடர்ந்து வளர்ந்தே வருகிறது என்பதற்கு இது எடுத்துக்காட்டு ஆகும்.பெயரளவு மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தி (GSDP) 2024-25 நிதியாண்டில் 31.19 லட்சம் கோடியிலிருந்து 2025-26 நிதியாண்டில் 35.29 லட்சம் கோடியாக விரிவடைந்து, 13.16% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. இது இந்திய மாநிலங்களிலேயே மிக உயர்ந்த வளர்ச்சியாகும்.

**இது நிதி சார்ந்த வளர்ச்சியின் அடையாளம் மட்டுமல்ல. சமூகத்தின் உயர்வு சார்ந்த வளர்ச்சியின் அடையாளம் ஆகும். 2011 முதல் 21 வரை அ.தி.மு.க. ஆட்சிகாலத்தில் தமிழ்நாடு அனைத்துத் துறையிலும் கடுமையான வீழ்ச்சியை அடைந்தது. 2020 கொரோனா காலமானது படுபாதாளத்துக்கு தள்ளியது. 2014 ஆம் ஆண்டு ஒன்றியத்தின் ஆட்சிக்கு வந்த பா.ஜ.க.வின் தவறான பொருளாதாரக் கொள்கைகள் ஒட்டுமொத்த இந்தியாவையும் பாதித்தது. பணமதிப்பிழப்பும், மாநிலங்களின் நிதி மூலதனத்தையும் வருவாயையும் சுரண்டும் சரக்கு மற்றும் மதிப்புக் கூட்டு வரியும் ஒட்டுமொத்த இந்தியாவைச் சுரண்டியது. அதிலும் குறிப்பாக தங்களது புறக்கணிப்பு, காழ்ப்புணர்வு அரசியல் காரணமாக தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு செயற்கைத் தடைகளை ஏற்படுத்தியது பா.ஜ.க.**

இத்தகைய சூழலில் தான் ஆட்சிக்கு வந்தது தி.மு.க. திராவிட முன்னேற்றக் கழகம் என்ற அரசியல் கட்சியின் கொள்கை – நோக்கம் – ஆகிய இரண்டும் ஆட்சி நிர்வாகத்திலும் எதிரொலிக்கும் வகையில் ‘திராவிட மாடல்’ என்ற கொள்கையை உருவாக்கினார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். ‘எல்லோருக்கும் எல்லாம்’ என்ற மக்கள் நலன் காக்கும் குணத்தையும், ‘அனைத்திலும் வளர்ச்சி’ என்ற மாநில வளர்ச்சி காக்கும் திட்டத்தையும் ‘திராவிட மாடலின்’ அடித்தளமாக அவர் குறிப்பிட்டார்.

**அனைத்துத் துறை வளர்ச்சி, அனைத்து மாவட்ட வளர்ச்சி, அனைத்து மக்கள் வளர்ச்சி, அனைத்து சமூக வளர்ச்சி என்பதை இலக்காக வைத்து செயல்பட்டார். தொழில் வளர்ச்சியைப் போலவே அனைத்துத் துறைகளும் கவனிக்கப்பட்டன. சென்னை போன்ற பெருநகரங்களைப் போலவே அனைத்து மாவட்டங்களும் கவனிக்கப்பட்டன. விளிம்பு நிலை மக்களது உயர்வுக்கும் பெரும் முக்கியத்துவம் தரப்பட்டது. சமூகத்தில் கவனிப்பற்றவர்களும் கவனிக்கப்பட்டார்கள். இவை அனைத்தையும் இணைத்ததில் தான் மாண்புமிகு முதலமைச்சரின் வெற்றி அடங்கி இருக்கிறது.**

**தொழில் துறையில் சிறந்த மாநிலமாக இருப்பது சமூக வளர்ச்சிக் குறியீட்டில் சிறந்த மாநிலமாக இருப்பது இல்லை. இந்த இரண்டையும் இணைத்ததில் தான் முதலமைச்சரின் கொள்கைத் தெளிவும், எதிர்காலத்தின் மீதான அக்கறையும் வெளிப்பட்டது.**

எத்தனை நிறுவனங்கள் வந்தது, அதன் மூலமாக எவ்வளவு ஏற்றுமதி நடந்தது என்பதும் முக்கியம்தான். அதே போல அந்த நிறுவனத்தின் மூலமாக எவ்வளவு பேருக்கு வேலை கிடைத்தது, அதில் எத்தனை பேர் பெண்கள் என்பதை அளவிடுவதும் முக்கியமானது தான். இது தான் திராவிட மாடல் ஆட்சியின் தனித்தன்மை ஆகும்.

**அமைதியான மாநிலம் என்று பெயர் எடுத்ததால் அதிகப்படியான தொழில் முதலீடுகள் வந்தன. சிறப்பான உட்கட்டமைப்பு வசதிகள், தொழில் வளர்ச்சிக்கு முதுகெலும்பாக இருந்தது. உற்பத்தித் துறை வளர்ந்துள்ளது. இதன் மூலமாக வேலை வாய்ப்புகள் பெருகி இருக்கிறது. சிறுகுறு நடுத்தர நிறுவனங்கள் அனைத்து தரப்பையும் மகிழ்ச்சி அடைய வைத்துள்ளது. தனிநபர் வருமானம் அதிகரித்துள்ளது. சமூக நலத் திட்டங்களால் மாநிலமே மகிழ்ச்சியில் இருக்கிறது. இதன் அடையாளம்தான் இந்த சாதனை ஆகும்.**

**திராவிட மாடல் 2.0 ஆட்சியில் இந்த வளர்ச்சியை மேலும் முன்னேற்றத்துக்கு எடுத்துச் செல்வார் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். திராவிடக் கொள்கையே சிறந்தது, திராவிட ஆட்சியே சிறந்தது என்பதை நடைமுறையில் பார்த்து வருகிறோம்.**

---

### காட்பாடி – கே.வி.குப்பம் சட்டமன்றத் தொகுதிகளில்

# தேர்தல் பணியாற்றிய கழக - கூட்டணிக் கட்சியினர் அனைவருக்கும் நன்றி!

## வேலூர் வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. அறிக்கை!

வேலூர், மே 1 -

வேலூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

ஒற்றுமையுடன் செயல்பட்ட அனைவருக்கும் என் நன்றி!

நடந்து முடிந்த 2026 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டப்பேரவைத் தேர்தலில் காட்பாடி மற்றும் கே.வி.குப்பம் சட்டமன்றத் தொகுதிகளில் மதச் சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிட்ட வேட்பாளர்களின் வெற்றிக்காக அயராது உழைத்த அனைத்து ஒன்றிய, பகுதி, பேரூர், கிளை, வட்ட கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமை கழக பொறுப்பாளர்கள், பார்வையாளர்கள் கூட்டணி கட்சி பொறுப்பாளர்கள், கழகத்தின் இரத்த நாளங்களாக விளங்கும் கடைக்கோடி தொண்டர்கள், BLA2, BDA, BLC சார்பு அணிகள் சார்ந்த நிர்வாகிகள், உள்ளாட்சிமன்ற பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைவருக்கும் வேலூர் வடக்கு மாவட்டச் செயலாளராக என் இதயப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

புதிதாக உருவாக்கப்பட்ட மாவட்ட அமைப்பில், ஒற்றுமையுடனும் ஒழுங்குடனும், திட்டமிட்ட முறையில் தேர்தல் பணிகளை முன்னெடுத்து, ஒவ்வொரு பகுதியிலும் மக்கள் தொடர்பை வலுப்படுத்திய உங்கள் உழைப்பே இந்த பிரச்சார பயணத்தின் அடித்தளமாக அமைந்தது. தேர்தல் என்பது வெறும் வாக்கு



சேகரிப்பு அல்ல; மக்களின் நம்பிக்கையை வெல்லும் அரசியல் பொறுப்பு என்பதை நீங்கள் செயலில் நிரூபித்துள்ளீர்கள்.

திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள், மக்கள் நலத்திட்டங்கள், சமூகநீதி கொள்கைகள் ஆகியவற்றை வீடு தோறும் எடுத்துச் சென்று மக்களின் உள்ளங்களில் நம்பிக்கையை விதைத்த உங்கள் பணியே கூட்டணியின் வலிமையை உயர்த்தியுள்ளது. சவால்கள் பல வந்த போதிலும், மன உறுதியுடனும் கட்டுப்பாட்டுடனும் செயல்பட்டு கழகத்தின் வலிமையை உயர்த்தி யுள்ளீர்கள்.

இந்நிலையில், 2026 தேர்தலை முன்னிட்டு காட்பாடி மற்றும் கே.வி.குப்பம் தொகுதிகளுக்கு சிறந்த வேட்பாளர்களை வழங்கி, கழகத்தின் வெற்றிப் பாதையை உறுதிப்படுத்திய கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் அவர்களுக்கும் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இவர்களுடைய அரசியல் வழிகாட்டுதலும் உறுதியான தலைமையும் எங்கள் தேர்தல் பணிகளுக்கு பெரும் ஊக்கமாக அமைந்தது.

வேலூர் வடக்கு மாவட்டம் என்ற பொறுப்பை மேலும் வலுப்படுத்தி, கழகத்தின் கொள்கைகளையும், சாதனைகளையும் மக்களிடம் தொடர்ந்து கொண்டு சேர்த்து, வரும் காலங்களிலும் தொடர்ச்சியான வெற்றிகளைப் பெற அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

அனைத்து உடன்பிறப்புகளுக்கும் மீண்டும் ஒரு முறை என் மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டி.எம். கதிர் ஆனந்த் எம்.பி. தெரிவித்துள்ளார்.

---

### 4.5 லிட்டர் விலக்கு: பிரத்யேக பயன்பாட்டிற்கான தமிழக அரசாணை!

# புதுச்சேரி உள்ளிட்ட பிற மாநில மதுபானங்களுக்குப் பொருந்தாது!

## மாநில தலைமை அரசு குற்றவியல் வழக்குரைஞர் அசன் முகம்மது ஜின்னா வாதத்தை ஏற்று சென்னை உயர்நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு!

சென்னை, மே 1 -

பிரத்யேக பயன்பாட்டிற்கான தமிழக அரசாணை 4.5 லிட்டர் விலக்கு - பாண்டிச்சேரி உள்ளிட்ட பிற மாநில மதுபானங்களுக்கு பொருந்தாது என மாநில தலைமை அரசு குற்றவியல் வழக்குரைஞர் அசன் முகம்மது ஜின்னா வாதத்தை ஏற்று சென்னை உயர்நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு அளித்துள்ளது.

மீஞ்சூர் பகுதியைச் சேர்ந்த தமிழரசன் மற்றும் ராஜேஷ்குமார் ஆகியோர், சென்னை உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், ஆந்திர மாநிலத்திலிருந்து 3.4 லிட்டர் மதுபானத்தை விற்பனைக்காக கொண்டு வந்ததாக, எளாவூர் சோதனைச் சாவடியில் கும்மிடிப்பூண்டி மதுவிலக்கு அமலாக்கப் பிரிவினர் தங்கள்மீது வழக்கு பதிவு செய்துள்ளனர். தமிழ்நாடு அரசாணையின் படி 4.5 லிட்டர் வரை மதுபானத்தை தனிப்பயன்பாட்டிற்காக வைத்திருக்கலாம் என்றும், தாங்கள் கொண்டு வந்த மதுபானம் தங்களின் சொந்த பயன்பாட்டிற்காகவே என்றும் எனவே இந்த வழக்கை ரத்து செய்ய வேண்டும் என கோரினர்.

இந்த மனுவை விசாரித்த உயர்நீதிமன்றம், முன்பாக புலன் விசாரணைக்கு இடைக்காலத் தடை விதித்து உத்தரவிட்டிருந்தது.

தமிழக அரசின் மாநில தலைமை அரசு குற்றவியல் வழக்குரைஞர் அசன் முகம்மது ஜின்னா அவர்களின் முறையீட்டின் பேரில், இந்த வழக்கு இறுதி விசாரணைக்காக நீதிபதி நிர்மல் குமார் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

அப்போது மனுதாரர் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், மனுதாரர்கள் அனுமதிக்கப்பட்ட அரசாணையின் படி 3.4 லிட்டர் மட்டுமே கொண்டு வந்ததாகவும், நீதி மன்றத்தின் முன்தீர்ப்புகள் மற்றும் 4.5 லிட்டர் தனிப்பயன்பாட்டு விலக்கு அடிப்படையில் இந்த முதல் தகவல் அறிக்கையை (FIR) ரத்து செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

**வழக்கிற்குப் பொருந்தாது! அசன் முகமது ஜின்னா வாதம்!**

அரசு தரப்பில் ஆஜரான மாநில தலைமை குற்றவியல் வழக்குரைஞர் அசன் முகம்மது ஜின்னா அவர்கள், 4.5 லிட்டர் விலக்கு அரசாணை என்பது தமிழ்நாட்டில் விற்பனை செய்யப்படும் மதுபானங்களுக்கு மட்டுமே பொருந்தும் என்றும், புதுச்சேரி, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட பிற மாநிலங்களில் இருந்து கொண்டு வரப்படும் மதுபானங்களுக்கு எந்த வகையிலும் பொருந்தாது என்றும் வாதிட்டார். இதற்கான விளக்கங்களை உள்துறை செயலாளர் ஏற்கனவே வழங்கியிருப்பதாகவும் குறிப்பிட்டார். மேலும், முந்தைய தீர்ப்புகள் இந்த அம்சத்தை கருத்தில் கொள்ளாமல் வழங்கப்பட்டதாகவும், அவை இவ்வழக்கிற்கு பொருந்தாது என்றும் தெரிவித்தார்.

அத்துடன், பாண்டிச்சேரியில் இருந்து தமிழ்நாட்டிற்கு 4.5 லிட்டர் வரை மதுபானம் கொண்டு வரலாம் என உயர்நீதிமன்றம் அனுமதி வழங்கியதாக சமூக ஊடகங்களில் தவறாக பரவிய தகவல்களையும் சுட்டிக்காட்டினார்.

**சமூக ஊடகங்களில் தவறான தகவல்!**

இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி நிர்மல் குமார் அவர்கள், 4.5 லிட்டர் தனிப்பயன்பாட்டு விலக்கு அரசாணை என்பது தமிழ்நாட்டில் சட்டபூர்வமாக விற்பனை செய்யப்படும் மதுபானங்களுக்கு மட்டுமே பொருந்தும் எனத் தீர்ப்பளித்து, மனுவை தள்ளுபடி செய்தார்.

இதன் மூலம், பாண்டிச்சேரி உள்ளிட்ட பிற மாநிலங்களில் இருந்து 4.5 லிட்டர் வரையிலான மதுபானங்களை கொண்டு வரலாம் என சமூக ஊடகங்களில் பரவிய தவறான தகவல்களுக்கு இந்த தீர்ப்பு முற்றுப்புள்ளி வைத்துள்ளது. மேலும், பிற மாநிலங்களிலிருந்து மதுபானங்களை கொண்டு வருவது சட்டப்படி குற்றமாகும் என்பதையும் இந்த தீர்ப்பு உறுதிப்படுத்தியுள்ளது.

---

### மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை! டி.மோகன்தாஸ் வரவேற்புரை! இடைக்கழிநாடு பேரூராட்சி மன்ற உறுப்பினர்

# பொறியாளர் பெ.பிரபு (எ) ஜெயலட்சுமணன் இல்ல காதணி விழா!

## ஆ.இராசா எம்.பி. – அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் – அன்பகம் கலை வாழ்த்துரை!

காஞ்சிபுரம், மே 1-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், இடைக்கழிநாடு பேரூராட்சி மன்ற உறுப்பினர் கப்பிவாக்கம் பொறியாளர் பெ.பிரபு (எ) ஜெயலட்சுமணன் - பெ.ஜெ.உமாமகேஸ்வரி ஆகியோரின் குழந்தைகள் ஜெ.தமிழிலக்கியன் (எ) ரித்தேஷ், ஜெ.தமிழமுதன் (எ) யுவனேஷ் ஆகியோருக்கு காதணி விழா 14.5.2026 - வியாழக்கிழமை காலை 8.30 மணியளவில் கப்பிவாக்கம் ஸ்ரீ பெரியாண்டவர் திருக்கோயில் நடைபெறுகிறது.

அதைத் தொடர்ந்து மதியம் 12 மணியளவில் (ECR) கிழக்கு கடற்கரை சாலை, தேன்பாக்கம் ஸ்ரீசாய்ராம் ஏ.சி.மஹாலில் விருந்து உபசரிப்பு நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

பேரூர்க் கழகச் செயலாளர் டி.மோகன் தாஸ், முன்னாள் மன்ற உறுப்பினர் வைஜெயந்தி மோகன் தாஸ் ஆகியோர் வரவேற்கின்றனர்.

சு.சக்திவேல், எம். அருணா, ஆர்.ரஞ்சித்குமார், சாந்தி முருகேசன், ஆர்.சசிகுமார், எஸ்.பக்தவச்சலம், எம்.எச்.பக்ருதீன் அலி அகமது, கே.எஸ். ஜெயராமன், ஜி.வி.பெருமாள், இரஞ்சன் (எ) வஜ்ரவேலு, எஸ்.தட்சணாமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இவ்விழாவில் கழக துணை பொதுச் செயலாளர் - முன்னாள் ஒன்றிய அமைச்சர் ஆ.இராசா, அமைச்சர் - மண்டலப் பொறுப்பாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கழக அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, கழக துணை அமைப்புச் செயலாளர் தாயகம் கவி, க. செல்வம் எம்.பி., கழக துணை அமைப்புச் செயலாளர் ஆஸ்டின், சி.வி. எம்.பி.எழிலரசன், பனையூர் மு.பாபு, நித்யா சுகுமார், சிந்தனை செல்வன், எஸ்.அமுலு பொன்மலர், ச.இனியரசு, டாக்டர் ஆர்.டி.அரசு, ப.அப்துல் மாலிக், கண்ணிகை ஜி.ஸ்டாலின் ஆகியோர் பங்கேற்று குழந்தைகளை வாழ்த்துகின்றனர்.

மேலும் இவ்விழவில் ஏழுமலை, எ.சிற்றரசு, எ.சரவணன், எம்.எஸ். பாபு, கே.எஸ்.ஆர்.கார்த்திகேயன், கே.குமார், ஜி. குமார், பி.எச்.சத்யசாய். பொண்.சிவக்குமார், வெளிக்காடு வெ.ஏழுமலை, டி.வி.கோகுலக் கண்ணன், கே.ஞானசேகரன், எஸ்.டி.பிரேமசந்த், ஆர்.தசரதன், ஏ.யுவராஜ், எல்.எஸ்.ரவீந்திரநாத், ஏ.என்.பாரத், மு.குணசேகரன், கே.நாகராஜ், ஜே.சங்கர், செம்பருத்தி துர்கேஷ், சாந்திராமச்சந்திரன், சம்யுக்தா ஐய்யனார், ஆர்த்தி செல்வகுமார், வி.முனுசாமி, சி. தயாளன், என்.ராஜ்குமார், பெ.பாக்கியராஜ், பா. கோட்டீஸ்வரி, எஸ். இளையராஜா, புவனேஸ்வரி, வேலு, ஏ.சங்கர், கே.பத்மநாபன், ஏ.மணிவண்ணன், எம்.நாகூர்மீரான், இளவரசி சரவணன், பரமேஸ்வரி, சங்கரலிங்கம், சுசிலா, ஆறுமுகம் புவனேஸ்வரி முருகதாசன், என்.தமிழரசன் விசாலாட்சி, லோகு, மோனிஷா சகாதேவன், கே.அருண்பாபு, வஜனா பாஸ்கரன், சாந்தி ரவிக்குமார், ஜெயலட்சுமி மகேந்திரன், கலாவதி, நாகமுத்து, பிரேமா சங்கர், சித்ரா ராஜேந்திரன் உள்ளிட்ட கழகத்தினர் பலர் பங்கேற்கின்றனர்.

பேரூர் மாணவர் அணி துணை அமைப்பாளர் எஸ்.பாஸ்கரன் நன்றி கூறுகிறார்.

---

# மயிலாப்பூர் மேம்பாலத்தை புதுப்பிக்கும் பணி தீவிரம்!

## தூண்களில் விளக்குகள் பொருத்தும் பணி மும்முரம்!

சென்னை, மே 1 -

மயிலாப்பூர் மியூசிக் அகாடமி பகுதியில் உள்ள மேம்பாலத்தை புதுப்பிக்கும் பணி மும்முரமாக நடைபெற்று வருகிறது. சென்னை மாநகராட்சி சார்பில் ராதாகிருஷ்ணன் சாலை மற்றும் டி.டி.கே. சாலை சந்திப்பில், மியூசிக் அகாடமி பகுதியில் உள்ள மேம்பாலத்தை அழகுபடுத்தும் பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன. மேம்பாலத்தில் உள்ள 22 தூண்களும் நவீன ரெடிமேட் கான்கிரீட் மூலம் வலுப்படுத்தப்படுகிறது. தூண்களில் நூற்றுக்கும் மேற்பட்ட விளக்குகள் பொருத்தும் பணி, ஒப்பனை அறை, கட்டுமானப் பணிகள் மற்றும் நடைபாதைத் தடுப்புகள் அமைக்கும் பணிகளும் விறுவிறுப்புடன் நடைபெற்று வருகின்றன.